மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, இதைப்போன்ற பிரச்சினைகள் சில இடங்களில் எழலாம். ஆனால் நடப்பாண்டைப் பொறுத்தவரை ரயில் வெளியே குறைந்த விலைக்குக் காகிதங்கள் கொடுக்கப்பட்டு, 3 ரூபாய்க்குள்ள நோட்டுப் புத்தகங்கள் ரூ. 2.50; ரூ. 2.75-க்கு விற்கப்பட்டிருக்கின்றன. அதனால் பிரச்சினை இல்லை, இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று மாணவர் கூட்டுறவு அமைப்பின் மூலம் இந்த விற்பனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அவைக்கு அளிக்கிறேன்:

[அ] இந்தியத் தணிக்கைத் துணைத் தலைவரின் 1976–77 ஆம் ஆண்டிற்கான அறிக்கைமீது [வருவாய்-வரவினங்கள்] பொதுக் கணக்குக் குழு (1980–82) அளித்த பன்னிரெண்டாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை.

(ஆ) 1976–77 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகளின் மீதும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவான் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகளின் மீதும் பொது கணக்குக் குழு [1980–82] அளித்த பதினைந்தாவது அறிக்கை [ஏழாவது பேரவை]யில் அளித்துள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்திரண்டாவது அறிக்கை.

(இ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77 ஆம் ஆண்டிற்கான அறிக்கைமீது (வருவாய் வரவினங்கள்) பொதுக் கணக்குக் குழு அளித்த பதினான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்திமூன்றாவது அறிக்கை.